
# மனித உரிமைகள் மீட்பு

மாதமிருமுறை இதழ்

உரிமை - 7 மீட்பு - 20 ஜனவரி 16 - 30 | 2023 விலை 20 / -




# காஷ்மீரில் இந்திய ஒற்றுமை யாத்திரை



# கல்லை கனியாக்கிய ராம் என்ற காந்தியின் மந்திரம் !

**மகாத்மா காந்தி சிறையில் இருந்தபோது ஸ்மட்ஸ் என்ற மகா கொடியவன் ஜெயிலராக இருந்தான்.**

எல்லாக் கைதிகளையும் எலும்பு ஒடிய அடிப்பவன். காந்தியையும் கீழே தள்ளி, பூட்ஸ் காலால் பலமுறை மிதித்தான், அடித்தான். அடிக்கும்போது எல்லோரும் ஐயோ! என்று அலறினார்கள்.

ஆனால், காந்தி மட்டும் "ராம்!ராம்!!" என்று சொன்னது, அவனை மிகவே யோசிக்க வைத்தது. அன்று முதல் காந்தியை அடிப்பதை நிறுத்தினான். ஆனால், காந்தியை அவ்வப்போது உற்றுப் பார்த்தான். இலேசாகப் புன்முறுவல் காட்டினான்.

ஒரு நாள் "மிஸ்டர் காந்தி"! என்று கனிவாக அழைத்து நான் உங்களுக்கு ஏதாவது உதவ நினைக்கின்றேன்; என்ன வேண்டும் என்றான்? ஏதாவது புத்தகம் கொடுங்கள் என்றார் காந்தி. அவன் "பைபிள்" சார்ந்த இரு நூல்களைப் பரிசாக கொடுத்தான்.

இந்தத் தொடக்கம் நட்பாக மாறியது; வளர்ந்தது. ஒரு நாள் காந்தியிடம் வந்த ஸ்மட்ஸ், நான் உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியையும், ஒரு வருத்தமான செய்தியையும், கொண்டு வந்துள்ளேன் என்றான். மகழ்ச்சி எது? வருத்தம் எது? என்று கேட்டார் காந்தி.

இன்று உங்களுக்கு விடுதலை. இது மகிழ்ச்சியான செய்தி. ஆனால், உங்களைப் பிரிய என்னால் முடியவில்லை. இது வருத்தமான செய்தி என்றான் ஸ்மட்ஸ். காந்தி சொன்னார், "நானும் உங்களுக்கு ஒரு பரிசு தருகிறேன்; என் நினைவாக வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி, தான் சிறையில் தைத்த பூட்சை அவரிடம் கொடுத்தார்.

ஆவலோடு அணிந்து பார்த்த ஸ்மட்ஸ் கேட்டான், "இவ்வளவு துல்லிமாகத் தைக்க, என் கால்களின் அளவு எப்படிக் கிடைத்தது" என்று கேட்க, சிரித்தபடி காந்தி தனது மார்புத் துண்டை அகற்றினார்; ஆரம்பத்தில் ஸ்மட்ஸ் காலால் உதைத்தபோது ஏற்பட்ட வடுக்கள் அங்கு இருந்தன. "இந்த வடுக்களை அளந்துதான் தைத்தேன்" என்று காந்தி சொன்னார்.

"தடால்" என்று சத்தம்; ஸ்மட்ஸ் கீழே விழுந்து காந்தியின் கால்களைப் பிடித்துக் கதறினான்."நான் மிருகம்! கொடிய, கேவலமான, மிருகம்!! என்னை மன்னித்து விடுங்கள். இனி யாரையும் அடிக்க மாட்டேன்" என்றார். ஒரு நிமிடத்தில், ஒரு கொடிய மிருகம், மென்மையான மனிதனாக மாறியது.

"கல்லையும் கனியாக மாற்றலாம்" என்று இதைத்தான் சொன்னார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஸ்மட்ஸ் சத்தியம் செய்தான். "இந்த பூட்ஸ்தான் இனி எனக்குக் கடவுள்; இதை மட்டுமே வணங்குவேன்" அணியமாட்டேன் என்று சொல்லி அந்த பூட்சை தன் பூஜை அறையில் வைத்து அப்படியே வணங்கினான்.

"நாம் நினைத்தால், யாரையும் மன்னிக்கவும் முடியும். மாற்றவும் முடியும்". மன்னிக்கின்ற மனம் தான் மனிதனை மகாத்மாவாக மாற்றும்.

அன்பே சிவம்!!! கருணையே யேசு!!!

நற்பண்பே நபிகள்!!!!

மனிதன் மகிழ்வுடன் ஒற்றுமையுடன் வாழ்ந்திட மாமனிதமே மிகச்சிறந்த பண்பு.....

# மனித உரிமைகள் மீட்பு

## (மாத இருமுறை இதழ்)

வெளியீட்டாளர்: M. அப்துல்ரகுமான்

உரிமை-7 மீட்பு-20 ஜனவரி 16-30 | 2023



**ஆசிரியர்:** நீலகிரி K. மதுசூதனன்.
**இணை ஆசிரியர்:** புதுவை K. ராஜாராம்குமார்.
**தொகுப்பு ஆசிரியர்:** வேலூர் M. ராமச்சந்திரன்.
**சிறப்பு உதவி ஆசிரியர்:** தேனி AR. நாசர்கான்.
**சிறப்பு துணை ஆசிரியர்:** நாகர்கோயில் Dr. S முகம்மது அலி,
**சிறப்பு செய்தி ஆசிரியர்:** வாணியம்பாடி G. வெங்கடேசன்.
**பொறுப்பு ஆசிரியர்:** பெரம்பலூர் M. இளவரசன்.
**தலைமை செய்தி ஆசிரியர்:** நாகர்கோயில் C.J. சுதர்மன்.
**கௌரவ ஆசிரியர்:** கிருஷ்ணகிரி Dr. குமரவேல்.
**தலைமை ஆசிரியர்கள்:** Dr. முகம்மது காசிம், Dr. K. கலைச்செல்வன்.
**முதன்மை ஆசிரியர்கள்:** பரமகுடி S. பதர்னிஷாபேகம், R.M நந்தினி, T. அரவிந்தன், Dr. P. முருகேசன், கேரளா P.K. பிரதிஷ், SGM. ரமேஷ்.

**நிர்வாக ஆசிரியர்கள்:**
Dr M. ஹரிகிருஷ்ணன், M. காதர் முகைதீன்.

**கௌரவ இணை ஆசிரியர்கள்:** R. அகிலேஷ், A. கேம்ராஜ் N. அன்பழகன், A. பிரபாகரன், S.A. சையதுமுகைதீன் ஆலிம், S. லோக சுந்தரம், A.விஜி, R. ரத்தீஷ், C.சதிஷ்.

**கௌரவ செய்தி ஆசிரியர்கள்:**
S. ஆல்பர்ட் பிரான்சிஸ் சேவியர், R. சந்திரபோஸ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:** S. ரமேஷ், R. சாம் எட்வர்ட்.

**செய்தி ஆசிரியர்கள்:**
R. M. பரமகுடி ராமச்சந்திரன், புதுவை S செல்வமணி.

**கௌரவ இணை ஆசிரியர்:** A.R. பத்மநாதன், RNS. வெங்கடேஷ்வரா

**முதன்மை துணை ஆசிரியர்கள்:** M. தனராஜ், M. லோகேஷ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:**
D. கென்னடி, L.S. மனோகரன், S. தினேஷ்ராஜ், S. முத்து இப்ராகிம் ஷா, M. ஜெய்பிரசாத்.

**தலைமை இணை ஆசிரியர்கள்:**
G. திருச்செந்தில்வேல், T. செந்தில்குமார், ST ஜோசப், K. சதீசன்.

**தலைமை கௌரவ ஆசிரியர்கள்:**
M. கார்த்திக், A. ஷபீக் ரகுமான்.

**தொகுப்பு இணை ஆசிரியர்கள்:**
M. விஜயகுமார், S.B. ரவிக்குமார்.

**தொகுப்பு துணை ஆசிரியர்கள்:**
C. பெருமாள், J. கோவிந்தராஜ், C. அய்யாவு, R. தாகிர், K. ரவிச்சந்திரன்.

**துணை ஆசிரியர்கள்:**
D.சுரேஷ்குமார், G.சுரேஷ், A. மன்சூர், தனுஷ் பாண்டியன், J தாஹிர்.

**கௌரவ துணை ஆசிரியர்கள்:**
P. சதீஷ், G. அருள்செல்வன், D. கோபிநாத், P. உதயகுமார், A.T. அஷ்ரப், S. ரவிக்குமார்.

**உதவி ஆசிரியர் குழு:**
K. நமச்சிவாயம், S. சரவணன், M.S. ஆரோக்கியசாமி,
M. விஜயேந்திரன். K. தம்புசாமி, முசா(எ)சாகுல் ஹமீது, Dr. ஸ்டேன்லி மோசஸ், Dr. L. ரமேஷ், A.S. அருண்குமார், A. முஜிபுர் ரகுமான், M. மாலா, M. ஆனந்தராஜ், AMS. ஹம்சத் அலி, R. சுப்பு, D. ராஜீவ்காந்தி, S. முரளிதரன், T. சுதாகர், S. கலாநிதி, G. கலையரசன், M. நாகராஜ், கிஷோர் குமார், ஜெயின் சன்சா, R.மலர்கொடி, RD ராம்குமார், A. ஆரோக்கியசாமி.

**நிருபர்கள்:**
M. தயாநிதி, S. சுல்தான்அலாவுதீன், M.சுரேஷ்குமார், M. செய்யது சகாபுதீன், S. சீனிவாசன், S. கிருஷ்ணன், P. வேல்முருகன், A. பார்த்திபன், S. சுரேஷ், S. சுப்ரமணி, லாசரஸ் கோவல், D. வில்வநாதன், G. ஜாபர் அலி, Dr.A. அருள்சாமி, V. முத்துகுமரேசன், S. சுந்தரமூர்த்தி, C. பிரபாசிங், M.J. சீனிவாசன், B. செல்வமணி, Dr. முஸ்தபா, S. லோகநாதன், A. முகமது தௌபிக், M. ஈஸ்வரி, V. ராஜாமுகமது, I. இப்ராஹிம், S.S. சஹாபுதீன், A. முகமது இதிரீஸ், R. ஜெயாகிருஷ்ணன், K. ரஜமோனி, A. விஜயசிங்கம், G. குமரேசன், M. அஹமத்முஸ்தபா ஆலிம், M. தமிழ்செல்வன், Y. முபாரக், ரியாஸ் அகமது, S. முகமது ஷெரீப், முஜிபூர்ரகுமான், S. சசிகுமார், R. ரவி, A. அமிர்தவேல், Y. மைதின் ஷசா, V. செல்வராஜ், S. சபாபதி, Dr. டார்வின் ஜான், ஜெயசுனிதா, R. சுதாகர், A. செல்வராஜ், C. அய்யாவு, K. சின்னராஜா, N. சுரேஷ், Y. முபாரக் அலி, S. ரியால் அகமது, M. கோவிந்தராசு, முரளி (எ) பிரேம்குமார், S. பாலமுருகன், S. தென்னரசு, Dr. ஜான் டைட்டஸ் இம்மானுவேல், R. பிரஸ்டன்ட், R. டேனியல், சத்திய நாராயணன், இர்பான், W. பீட்டர், கார்த்திகேயன், சரவணன், ஜான் மார்க், கோபாலகிருஷ்ணன், B. புஷ்பலதா, C. பெருமாள், K.A. செல்வராஜ், K. குணசேகரன், M. கலந்தர் முகைதின், S. சுந்தரமூர்த்தி, M. சுரேஷ், P. சிவகாமி, உபகாரம், ஆறுமுகம், A. பாலசுப்பரமணியன், தாமரைகனி, K. மணிகண்டன், M. பாலமுருகன், R. நாகராஜன், வேலுச்சாமி, K.S.சசிகுமார், L. ராஜகணபதி, A. ஜாபீர், M.மனோஜ், S. வெங்கடேஷ்குமார், G.ஜெயபிரகாஷ், S.ரபி, N.ஜெய்கணேஷ், M.ராஜா, M.தயாளன், K. விஜயகுமார், P. கிரேசி எலிசபத்மேரி, A.சக்திவேலு, V.சக்திவேல், D.சிவப்பிரகாசம், R.விவேக்கமல், K.ராஜா, H. ஹாஜா மைதின், R. ஜீவனந்தம், S. ஜான்சன், T. ஜெயசந்திரன், முபாரக் அலி, ராஜா முகமது, ரஸியாபேகம், சுவைஹாபேகம், M. மல்லிகா, முகமது அஜீஸ் K. ராஜ்குமார், V. தசரதன்.

**சட்ட ஆலோசகர்கள்:**
R. சிவக்குமார் BA BL (மதுரை),
R. சீதா BA BL (பட்டுக்கோட்டை), C. பாலாஜி BA BL (திருச்சி),
M. ஞானசேகரன் BA BL (பொன்னமராவதி),
K. கேசவமூர்த்தி BA BL (தஞ்சாவூர்),
R. S. ராஜேந்திரன் BA LLB (வேதாரண்யம்),
C. முருகன் BA BL (நாகப்பட்டினம்),
D.G. தினகரன் BA LLB (கிருஷ்ணகிரி),
S. மோகன் காந்தி BA BL (ஓசூர்).

**புகைப்பட நிருபர்கள்:**
AMS. சல்மான் அஹமது, A. குர்சித் ஆலம் கான், R. ரவி, V. வித்யாவீரப்பன், M. அருண், Dr.R. செல்வராணி. K. ஷக்கீனா சொர்ணலதா, மதிவிழி.



**இந்த இதழ் குறித்த அனைத்து தொடர்புகளுக்கும் முகவரி:**
ஆசிரியர்,
**மனித உரிமைகள் மீட்பு (மாத இருமுறை இதழ்)**
எண்:2/115D1, ஆன்டாஞ்சிரா, கொன்னச்சால் Po,
எருமாடு, பந்தலூர் தாலுக்கா, நீலகிரி மாவட்டம்,
தமிழ்நாடு-643239. செல்: 9543410000
Mail: manithurimaigalmeetpu@gmail.com
http://internationalhumanrightswatch.org



"மனித உரிமைகள் மீட்பு" இப்பொழுது ஆன்லைன் செய்திகளாய் உலகமெங்கும். https://youtube.com/@manithaurimaigalmeetpu5936 என்ற Youtube மூலமாக காணலாம் மற்றும் சமூக வலைத்தளத்தில் பகிரலாம்.

எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உயர்நீதிமன்றத்தின் வரம்புக்கு மட்டுமே உட்பட்டவை. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு மனித உரிமைகள் மீட்பு இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் சிறப்பு கட்டுரையாளர்கள் இன் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே.

## முக்கிய அறிவிப்பு

**மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கை சங்கங்கள் இல்லை. மனித உரிமைகள் மீட்பு என்பது இந்திய பத்திரிக்கை துறையில் RNI பதிவு பெற்ற பத்திரிகையாகும். சில நபர்கள் மனித உரிமைகள் என்ற பெயரில் அமைப்புகள் மற்றும் சங்கங்கள் போன்று செயல்பட்டால் பத்திரிக்கை நிர்வாகம் பொறுப்பேற்காது.**

இப்படிக்கு
-ஆசிரியர்



# செகந்திராபாத் உடன் விசாகப்பட்டினத்தை இணைக்கும் வந்தே பாரத் விரைவு ரயிலை பிரதமர் மோடி கொடியசைத்து தொடங்கிவைத்தார்...

**செ**கந்திராபாத் விசாகப்பட்டினம் இடையே வந்தே பாரத் விரைவு ரயிலை பிரதமர் நரேந்திர மோடி காணொலி காட்சி மூலம் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இந்த ரயில் இந்திய இரயில்வே அறிமுகப்படுத்திய எட்டாவது வந்தே பாரத் விரைவு ரயில் ஆகும். மேலும், தெலங்கானா, ஆந்திரா ஆகிய இரண்டு மாநிலங்களை இணைக்கும் முதலாவது வந்தே பாரத் ரயில் இதுவாகும்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய பிரதமர் மோடி, விழாக்கள் கொண்டாடப்படும் இந்த மங்களகரமான சூழலில், ஆந்திரா மற்றும் தெலங்கானாவின் பாரம்பரியத்தை இணைக்கும் மாபெரும் பரிசை இரு மாநிலங்களும் பெறுவதாகக் குறிப்பிட்டார். பண்டிகைகளை ஒட்டி, இரு மாநில மக்களுக்கும் அவர் வாழ்த்து தெரிவித்தார். ராணுவ தினத்தை முன்னிட்டு ராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்திய அவர், இந்திய ராணுவம் வீரத்திற்குப் பெயர் பெற்றது எனக் கூறினார்.

நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் இணைக்கும் பண்டிகைகளைக் குறிப்பிட்டுப் பேசிய பிரதமர், இந்தியாவின் பல்வேறு பகுதிகளை புரிந்து கொள்ளவும், அறிந்து கொள்ளவும் இணைக்கவும் வாய்ப்பளிக்கும் வகையில், இந்திய ரயில்வேயும் நாட்டின் நீளம் மற்றும் அகலங்களைக் கடந்து ஒரே பாரதமாக



இணைப்பதாக குறிப்பிட்டார்.

வந்தே பாரத் விரைவு ரயில் பயணிகளுக்கு பெரிதும் பயனளிக்கும் என்பதைச் சுட்டிக்காட்டிய பிரதமர், செகந்திராபாத் விசாகப்பட்டினம் இடையிலான பயண நேரம் குறையும் என்றும் தெரிவித்தார்.

"வந்தே பாரத் புதிய இந்தியாவின் திறன் மற்றும் உறுதிப்பாட்டின் சின்னம்" என்று கூறிய பிரதமர், "இது விரைவான வளர்ச்சியின் பாதையைத் தேர்ந்தெடுத்த இந்தியாவின் சின்னம்" என்றார். தனது கனவுகள் மற்றும் லட்சியத்தை நோக்கி ஆர்வமாக இருக்கும் இந்தியாவை, தனது இலக்கை அடைய விரும்பும் இந்தியாவை, சிறந்து விளங்க பாடுபடும் இந்தியாவை, தனது குடிமக்களுக்கு சிறந்ததை வழங்க விரும்பும் இந்தியாவை இந்த ரயில் பிரதிபலிக்கிறது என்றும் பிரதமர் கூறினார். அடிமை மனப்பான்மையை உடைத்து தற்சார்பை நோக்கி இந்தியா செல்வதாகவும் பிரதமர் கூறினார்.

வந்தே பாரத் ரயில்கள் தொடர்பாக நடைபெற்று வரும் பணிகளின் வேகத்தையும் பிரதமர் சுட்டிக் காட்டினார். இந்த ஆண்டின் முதல் 15 நாட்களுக்குள் இரண்டாவது வந்தே பாரத் ரயில் தொடங்கி வைக்கப்படுவதாகவும், இது களத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் வேகத்தைக் குறிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார். வந்தே பாரத் ரயில்களின் உள்நாட்டுத் தயாரிப்பையும், மக்கள் மனதில் அவற்றின் தாக்கத்தையும் அவர் எடுத்துரைத்தார். பூமியை 58 முறை சுற்றி வருவதற்குச் சமமாக, 7 வந்தே பாரத் ரயில்கள் 23 லட்சம் கிலோமீட்டர் தூரத்தை கடந்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். வந்தே பாரத் ரயிலில் இதுவரை 40 லட்சத்துக்கும் அதிகமான பயணிகள் பயணம் செய்துள்ளனர் எனவும் பிரதமர்குறிப்பிட்டார்.

"இணைப்பு தொடர்பான உட்கட்டமைப்பு இரண்டு இடங்களை இணைப்பது மட்டுமல்லாமல் கனவுகளை யதார்த்தத்துடனும், உற்பத்தியை சந்தையுடனும், திறமையை சரியான தளத்துடனும் இணைப்பதாகப் பிரதமர் கூறினார். வளர்ச்சியின் சாத்தியங்களை இணைப்பு விரிவுபடுத்துவதைப் பிரதமர் சுட்டிக்காட்டினார். "எங்கெல்லாம் கதி (வேகம்) இருக்கிறதோ அங்கே பிரகதி (முன்னேற்றம்) இருக்கிறது எனவும், முன்னேற்றம் ஏற்படும் போதெல்லாம் செழிப்பு உறுதி" என்றும்

பிரதமர் கூறினார்.

நவீன கால இணைப்பின் பலன்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு பயன்பட்ட காலத்தை நினைவு கூர்ந்த பிரதமர், விலை உயர்ந்த போக்குவரத்து அதிக நேரத்தை வீணடித்ததால் பெரும்பாலான மக்கள் அவதிப்பட்டதாகக் கூறினார். வந்தே பாரத் ரயில், அந்த சிந்தனையை விட்டு விலகி, வேகம் மற்றும் முன்னேற்றத்துடன் அனைவரையும் இணைக்கும் பார்வைக்கு எடுத்துக்காட்டாக இருப்பதாகவும் பிரதமர் மோடி குறிப்பிட்டார். நல்ல மற்றும் நேர்மையான நோக்கத்துடன், இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டபோது, ரயில்வேயின் மோசமான பிம்பங்களும், அணுகுமுறையும் மாறியது என்றும், கடந்த எட்டு ஆண்டுகளில், இதுவே இந்திய ரயில்வேயை மாற்றியமைத்த மந்திரம் என்றும் பிரதமர் எடுத்துரைத்தார்.

இந்திய ரயில்வேயில் பயணம் செய்வது இனிமையான அனுபவமாக மாறி வருகிறது என்றும் பிரதமர் கூறினார். பல ரயில் நிலையங்கள் நவீன இந்தியாவின் பிம்பத்தை பிரதிபலிப்பதாகவும், "கடந்த 78 ஆண்டுகளில் செய்யப்பட்ட பணிகள், வரும் 78 ஆண்டுகளில் இந்திய ரயில்வேயை மாற்றும்" என்றும் அவர் கூறினார். சுற்றுலாவை மேம்படுத்த விஸ்டாடோம் பெட்டிகள் மற்றும் பாரம்பரிய ரயில்கள், விவசாய பொருட்களை தொலைதூர சந்தைகளுக்கு கொண்டு செல்ல கிசான் ரயில், 2 டசனுக்கும் அதிகமான நகரங்களுக்கு மெட்ரோ ரயில் என எதிர்காலத்திற்கான விரைவு ரயில் போக்குவரத்து அமைப்பு வேகமாக உருவாகி வருகிறது என்றும் பிரதமர் மோடி கூறினார்.

தெலங்கானாவில் கடந்த 8 ஆண்டுகளில் ரயில்வே தொடர்பாக செய்யப்பட்டுள்ள விரைவானப் பணிகளை பிரதமர் மோடி சுட்டிக்காட்டினார். 2014ம் ஆண்டுக்கு முன்பு, தெலங்கானா மாநில ரயில்வேக்கு ரூ.250 கோடிக்கும் குறைவான நிதியே ஒதுக்கப்பட்டதாகவும், இன்று அது ரூ.3000 கோடியாக அதிகரித்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். தெலங்கானாவின் மேடக் போன்ற பல பகுதிகள் இப்போது தான் முதல் முறையாக ரயில் சேவை மூலம் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். 2014ம் ஆண்டுக்கு முந்தைய 8 ஆண்டுகளில் தெலங்கானாவில் 125 கிலோ மீட்டருக்கும் குறைவான புதிய ரயில்



பாதைகளே அமைக்கப்பட்டதாகவும், கடந்த சில ஆண்டுகளில் தெலங்கானாவில் சுமார் 325 கிலோமீட்டருக்கு புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். தெலங்கானாவில் 250 கிலோமீட்டருக்கும் அதிகமான ‘டிராக் மல்டிடிராக்கிங்’ பணியும் செய்யப்பட்டுள்ளதாகவும், இம்மாநிலத்தில் ரயில் பாதைகளை மின்மயமாக்குவது 3 மடங்கு அதிகரித்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். தெலங்கானாவில் உள்ள அனைத்து அகலப்பாதை வழித்தடங்களிலும் மின்மயமாக்கும் பணிகளை மிக விரைவில் முடிக்க உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

வந்தே பாரத் ரயில் ஆந்திராவில் தொடங்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்ட பிரதமர், ஆந்திரப் பிரதேசத்தில் ரயில் கட்டமைப்பை வலுப்படுத்த மத்திய அரசு தொடர்ந்து செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார். எளிமையாக வாழ்வதற்கும், வணிகம் செய்வதை எளிதாக்குவதற்கும் மத்திய அரசு எடுத்துள்ள முயற்சிகளை எடுத்துரைத்த பிரதமர், கடந்த சில ஆண்டுகளில் 350 கிலோமீட்டர் புதிய ரயில் பாதைகள் மற்றும் சுமார் 800 கிலோமீட்டர் மல்டி டிராக்கிங் கட்டுமானப் பணிகள் ஆந்திராவில் முடிவு பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டார். 2014க்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடுகையில், ஆந்திராவில் கடந்த அரசின் போது ஆண்டுக்கு 60 கிலோமீட்டர் ரயில் பாதைகள் மட்டுமே மின்மயமாக்கப்பட்டதை குறிப்பிட்ட பிரதமர் மோடி, இப்போது ஆண்டுதோறும் 220 கிலோமீட்டருக்கும் அதிகமான ரயில் பாதைகள் மின்மயமாக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

“இந்த வேகமும் முன்னேற்றமும் இப்படியே தொடரும்” என்று கூறியதோடு, தெலங்கானா மற்றும் ஆந்திரா இடையிலான வந்தே பாரத் விரைவு ரயிலில் இருந்த அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்து பிரதமர் மோடி தனது உரையை நிறைவு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன், மத்திய அமைச்சர்கள் அஸ்வினி வைஷ்ணவ், கிஷன் ரெட்டி, மாநில அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இது இந்திய ரயில்வே அறிமுகப்படுத்திய எட்டாவது வந்தே பாரத் விரைவு ரயில் ஆகும். இதன் மூலம் செகந்திராபாத்தில் இருந்து விசாகப்பட்டினம் செல்லும் பயண நேரம் பன்னிரண்டரை மணி நேரத்திலிருந்து எட்டரை மணி நேரமாகக் குறையும்.

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட வந்தே பாரத் விரைவு ரயிலின் பெட்டிகள் அதிநவீன வசதிகளைக் கொண்டுள்ளன. இது ரயில் பயணிகளுக்கு வேகமான மற்றும் வசதியான பயண அனுபவத்தை வழங்கும்.

வந்தே பாரத் விரைவு ரயிலின் அறிமுகம் இப்பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்தவும், வசதியான மற்றும் வேகமான பயண முறையை வழங்கவும் உதவும். இந்த ரயில் புறப்பட்ட 52 வினாடிகளில் 100 கிலோமீட்டர் வேகத்தை எட்டுவதோடு, அதிகபட்சமாக மணிக்கு 180 கிலோமீட்டர் வேகத்தில் செல்வது போன்ற மேம்படுத்தப்பட்ட அம்சங்களைக் கொண்டுள்ளது.





# காஷ்மீரில் இந்திய ஒற்றுமை யாத்திரை

**கா**ஷ்மீரில் இந்திய ஒற்றுமை யாத்திரையை மேற்கொள்ளும் போது காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி ஒரு சில இடங்களில் நடைபயணத்தைத் தவிர்த்து வாகனத்தில் செல்லுமாறு அவருக்கு மத்திய புலனாய்வு மற்றும் பாதுகாப்பு அமைப்புகள் எச்சரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் ராகுல் காந்தியின் பயணப் பாதையின் பாதுகாப்பு அம்சங்கள், அவர் இரவில் தங்குமிடத்தின் பாதுகாப்பு அம்சங்கள் ஆராயப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

*52 வயது காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி கடந்த ஆண்டு செப்டம்பர் 7ஆம் தேதி தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து இந்திய ஒற்றுமை*



யாத்திரையை தொடங்கினார். தமிழகம், கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா. மத்தியப் பிரதேசம், மஹாராஷ்டிரா, டெல்லி, பஞ்சாப், ஹரியாணா என பல மாநிலங்களிலும் அவர் யாத்திரை மேற்கொண்ட நிலையில் விரைவில் ஜம்மு காஷ்மீரில் யாத்திரை மேற்கொள்கிறார்.

ஜனவரி 19 ஆம் தேதியன்று ராகுல் காந்தி லக்கன்பூரில் நுழைகிறார். அங்கு இரவு தங்கிவிட்டு அடுத்தநாள் காலை கத்துவா செல்கிறார். பின்னர் இரவில் சட்வாலில் தங்குகிறார். ஜனவரி 21 ஆம் தேதி காலை ஹிராநகரில் இருந்து டுக்கர் ஹவேலி செல்கிறார். ஜனவரி 22ல் விஜய்பூர் முதல் சத்வாரி வரை பயணிக்கிறார்.

வரும் ஜனவரி 25 ஆம் தேதி ராகுல் காந்தி காஷ்மீரின் பனிஹால் பகுதியில் தேசியக் கொடி ஏற்றுகிறார் பின்னர் அனந்தநாக் மாவட்டம் வழியாக பயணித்து 2 நாட்களில் ஸ்ரீநகரை அடைகிறார். ராகுலின் ஸ்ரீநகர் பயணத்தின்போது அவருடன் மிகவும் குறைந்த அளவிலான நபர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும் என்று பாதுகாப்பு அமைப்புகள் அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

சில பாதைகள் பதற்றம் நிறைந்தவையாக அறியப்படுவதால் அங்கெல்லாம் ராகுல் காந்தி நடைபயணத்தை தவிர்த்து காரில் செல்லலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து ஜனவரி 30 ஆம் தேதி ராகுல் காந்தியின் தலைமையில் ஸ்ரீநகரில் எதிர்க்கட்சிகளின் கூட்டம் நடைபெறுகிறது. அதில் கலந்து கொண்டு இந்திய ஒற்றுமை யாத்திரையை ராகுல் காந்தி நிறைவு செய்கிறார்.

இந்தக் கூட்டத்தில் ஆம் ஆத்மி, சந்திரசேகர ராவின் பாரத் ராஷ்ட்ர சமிதி, ஒய்எஸ்ஆர் காங்கிரஸ், பிஜு ஜனதா தலம், அகாலி தலம், அதிமுக, ஒவைஸியின் ஏஐஎம்ஐஎம் ஆகிய கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளதாக காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார். இந்தச் சூழலில் தான் ராகுலின் பாதுகாப்பு குறித்து அறிவுரைகள் வெளியாகியுள்ளன.

Z+ பாதுகாப்பு: ராகுல் காந்திக்கு இப்போது Z+ பிரிவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அவரைச் சுற்றி 24 மணி நேரம் 8 முதல் 9 கமாண்டோக்கள் பாதுகாப்பில் இருப்பார்கள். கடந்த மாதம் ராகுல் காந்தி தனது யாத்திரையின் வழியில் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு மத்திய அரசுக்கு கோரியிருந்தார். அதற்குப் பதிலளித்த மத்திய அரசு ராகுல் காந்தியே கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் 100 முறைக்கு மேல் பாதுகாப்பு வளையத்தை மீறியிருக்கிறார் என்று தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. இப்போது காஷ்மீர் யாத்திரையில் பாதுகாப்பு குறித்து ராகுல் காந்திக்கு பாதுகாப்பு அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

# ரூ.20 கோடியில் வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் திட்டம்

## முதல்வர் தொடங்கி வைத்தார்

**தெ**ருவில் சுற்றித்திரியும் பிராணிகள் பராமரிப்புக்கு ரூ.20 கோடியில் "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் காயமடைந்து தெருவில் சுற்றித்திரியும் பிராணிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளை பராமரிக்கும் அரசுசாரா தொண்டு நிறுவனங்கள், பிராணிகள் துயர் துடைப்பு சங்கங்கள், பிராணிகள் சேவை நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கு ரூ.20 கோடியில் "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கை,"கால்நடைகள், வளர்ப்பு பிராணிகள் உயிர் வாழ்வதற்கு அவற்றின் உரிமையாளர்களை சார்ந்துள்ளது. இந்நிலையில் பல்வேறு



காரணங்களால் உரிமையாளர்களால் கைவிடப்பட்ட விலங்குகள் தாங்களே தற்காத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலையில் உள்ளன. இந்த விலங்குகள் உணவு மற்றும் தங்குமிடம் தேடி அலையும் போது, உடலில் காயங்கள் மற்றும் பாதுகாப்பற்ற, கெட்டுப்போன உணவை உட்கொள்ளும்போது தொற்றுநோய்கள் போன்ற பல்வேறு உடல்நலக் குறைபாடுகளுக்கு உட்படுகின்றன.

இத்தகைய கைவிடப்பட்ட விலங்குகளை காக்கும் வகையில், தமிழக அரசின் 20222023ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், “வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்” என்று பல்லுயிர் ஓம்பிய வள்ளலார் அவர்களின் 200வது பிறந்த ஆண்டை முன்னிட்டு, ஆதரவற்ற கைவிடப்பட்ட, காயமடைந்த வளர்ப்புப் பிராணிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளைப் பராமரிக்கும் அரசுசாரா நிறுவனங்கள், சேவை நிறுவனங்களுக்கு உதவியளிப்பதற்கு “வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்” என்னும் புதிய திட்டம் வரும் நிதியாண்டில் தொடங்கப்படும். இத்திட்டத்திற்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.



அதன்படி,கால்நடை பராமரிப்பு,பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் கைவிடப்பட்ட விலங்குகளை காக்கும் வகையில் “வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்“ எனும் புதிய திட்டத்தை முதல்வர் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தில், ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட காயமடைந்து தெருவில் சுற்றி திரியும் பிராணிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளுக்கு உணவு மற்றும் மருத்துவ சிகிச்சை அளித்தல், காயமடைந்த மற்றும் நோய்வாய்ப்பட்ட விலங்குகளுக்கு அவசர சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக பிராணிகள் துயர் துடைப்பு சங்கம் (SPCA), விலங்குகள் நல அமைப்புகள் (AWOs) பிராணிகள் நலன் தொடர்பான அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு (NGOs) மருத்துவ அவசர சிகிச்சை ஊர்தி (ஆம்புலன்ஸ்) கொள்முதல் செய்வதற்கு நிதியுதவி அளித்தல், ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட, காயமடைந்து தெருவில் சுற்றி திரியும் விலங்குகளுக்கு உறைவிடம் கட்டுவதற்கு நிதியுதவி அளித்தல், தெரு நாய்கள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி செலுத்துவதற்கு நிதியுதவி அளித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

விலங்குகளுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதி வழங்கிடவும், உறைவிடம் மற்றும் அவசர ஊர்தி சேவைக்காகவும், நீலகிரி India Project for Animal Fund Nature, சென்னை – Animal Care Trust, சென்னை – Madras Animal Rescue Society, சென்னை – Prithvi Animal Welfare Society மற்றும் சென்னை – பைரவா பவுண்டேஷன் ஆகிய தொண்டு நிறுவனங்களுக்கு மொத்தம் 2 கோடியே 14 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதல் தவணையாக 88 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை முதல்வர் வழங்கினார்." இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஆரோவில் காடுகள் அழிக்கப்படுவதை

## மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும்

**ஆரோவில் காடுகள் அழிக்கப்படுவதை மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில், “தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி எல்லையில் அமைந்துள்ள ஆரோவில் பன்னாட்டு நகரத்தில் சர்ச்சைக்குரிய கிரவுன் திட்டத்தை செயல்படுத்துவதற்காக, அங்கு வாழும் மக்களின் எதிர்ப்பையும் மீறி 500 க்கும் அதிகமான மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன. சுற்றுச்சூழலுக்கும், ஆரோவில் பசுமைப் பரப்புக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஆரோவில் நிர்வாகத்தின் இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது ஆகும்.


தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டம் மற்றும் புதுச்சேரியில் மொத்தம் 3930 ஏக்கர் நிலப் பரப்பில் ஆரோவில் பன்னாட்டு நகரம் அமைக்கப்பட்டுள்ளது. 1968 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த பன்னாட்டு நகரத்தில் 1150 ஏக்கரில் நகரப் பகுதியும், 2780 ஏக்கர் பரப்பளவில் பசுமைப்பகுதியும் அமைந்துள்ளன. ஆரோவில் நகரத்தில் பல்லாயிரக்கணக்கான மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. ஆனால், சர்ச்சைக்குரிய கிரவுன் எனப்படும் திட்டத்திற்கான சாலை அமைப்பதற்காக அங்குள்ள மரங்களை அடியோடு சாய்க்கும் நடவடிக்கைகளை பன்னாட்டு நகர வளர்ச்சிக்குழு மேற்கொண்டிருக்கிறது.



ஆரோவில் நகரத்தின் மையப்பகுதியில் 500 மரங்களை வெட்டுவதற்கு திட்டமிட்டுள்ள நகர வளர்ச்சிக் குழு, அதன் ஒரு கட்டமாக நேற்று மட்டும் ஜே.சி.பி எந்திரங்களின் உதவியுடன் 30 பெரு மரங்களை சாய்த்திருக்கிறது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அங்குள்ள குடியிருப்பாளர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். அதையேற்று மரங்களை வெட்டும் பணி கைவிடப்படுவதாக அறிவித்த நகர வளர்ச்சிக் குழு இன்று மீண்டும் மரங்களை வெட்டும் பணியை தொடங்கியிருப்பதாக தெரிகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் மிரட்டப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. நகர வளர்ச்சிக் குழுவின் போக்கு சரியானதல்ல.



ஆரோவில் நகரத்தில் எந்தத் திட்டத்தை செயல்படுத்தினாலும், அதற்கு ஆரோவில் குடியிருப்பாளர்கள் அவையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். ஆனால், இந்தத் திட்டத்திற்கு அத்தகைய ஒப்புதல் எதுவும் பெறப்படவில்லை. மரங்களை வெட்டினால் சுற்றுச்சூழலுக்கு எத்தகைய பாதிப்புகள் ஏற்படும் என்பதை அறிய சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், மரங்களை வெட்டுவதால் அதிக பாதிப்பு ஏற்படும் என்று தெரியவந்ததையடுத்து கிரவுன் திட்டத்திற்கான சாலையை மாற்றுப் பாதையில் அமைக்க அங்கு வாழும் மக்கள் வலியுறுத்தியதாகவும் கூறப்படுகிறது. ஆனால், நிர்வாகத்தில் உள்ள சில குழுக்கள் தங்கள் விருப்பப்படி சாலை அமைப்பதற்காக காடுகளை அழிப்பதாகத் தெரிகிறது.



ஆரோவில் பன்னாட்டு நகரத்தின் சிறப்பே அதன் அமைதியும், பசுமையும் தான். ஆரோவில் நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் வளர்ச்சியும், பரபரப்பும் நிறைந்தவை என்றாலும் கூட பன்னாட்டு நகரத்திற்குள் அவற்றின் சுவடுகளை பார்க்க முடியாது. வளர்ச்சியால் ஏற்படும் எந்த சீரழிவும் ஆரோவில் நகரத்திற்குள் இதுவரை நுழைந்ததில்லை. இயற்கையுடன் இணைந்து, குறைந்த நுகர்வு, குறைந்த கழிவு என்ற நோக்கத்துடன் ஆற்றல் வளங்களை வீணாக்காமல் வாழ வேண்டும் என்பது தான் ஆரோவில் நகரின் தத்துவம் ஆகும். அங்கு மகிழுந்துகள் கூட ஒரு கட்டத்திற்கு மேல் அனுமதிக்கப்படுவதில்லை. மிதி வண்டி தான் அதிகம் பயன்படுத்தப்படும் ஊர்தி ஆகும். அந்த அளவுக்கு அங்கு அமைதி பாதுகாக்கப்படுகிறது.

ஆரோவில் நகரத்தில் 50 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் வாழ முடியும் என்றாலும், இதுவரை 54 நாடுகளைச் சேர்ந்த 2814 பேர் மட்டுமே அங்கு வாழ்கின்றனர். பசுமை சொர்க்கம் என்று போற்றப்படும் ஆரோவில் நகரத்தின் காடுகளை வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் அழிப்பதை பொறுத்துக் கொள்ள முடியாது. ஆரோவில் நகரத்தில் 500 மரங்களை சாய்க்கப்படுவது சகித்துக் கொள்ள முடியாததாகும்; இது மன்னிக்க முடியாத குற்றம் ஆகும். இதை மத்திய, மாநில அரசுகள் வேடிக்கை பார்க்கக் கூடாது.

புவிவெப்பமயமாதல் குறித்த அச்சம் உலகம் முழுவதும் பரவி வருகிறது. புவிவெப்பநிலை உயர்வை 1.5 டிகிரி செல்சியசுக்குள் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக உலகம் முழுவதும் காற்று மாசுவைக் கட்டுப்படுத்தவும், அதிக அளவில் மரங்களை நட்டு வளர்க்கவும் பிரச்சாரங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இத்தகைய சூழலில் ஆரோவில் நகரத்தில் 500 பெரிய மரங்களை வெட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த விஷயத்தில் மத்திய அரசு தலையிட்டு, ஆரோவில் நகரத்தில் மரங்கள் வெட்டப்படுவதை தடுக்க ஆணையிட வேண்டும். தமிழக அரசும் இதை மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வேலூர், தி.மலை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளில் 110 படுக்கைகளுடன் ‘ஒமைக்ரான் வார்டு’ ஆக்சிஜன் வசதிகளுடன் சிகிச்சையளிக்க தயார்

**வேலூர், திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஒமைக்ரான் பாதித்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க 110 படுக்கைகளுடன் கூடிய தனி வார்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த வேலூர் மாவட் டத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் ஒமைக் ரான் வார்டுகளை தயார்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.**

உலக நாடுகள் மத்தியில் கரோனா வைரஸின் ஒமைக்ரான் குறித்த அச்சம் அதிகரித்து வருகிறது. ஏறக்குறைய 38 நாடுகளில் ஒமைக்ரான் பரவல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் பெங்களூருவில் 2 பேருக்கு ஒமைக்ரான் தொற்று உறுதியான நிலையில், ஒமைக்ரான் பரவலை கட்டுப்படுத்தும் பணிகள் மாநில அளவில் தொடங்கியுள்ளன.

வேலூர் மாவட்டத்தில் கரோனா தொற்று பரவல் எண்ணிக்கை கடந்த சில நாட்களாக ஒற்றை இலக்கத்தில் இருந்து இரட்டை இலக்கத்தை எட்டியுள்ளது.

டிச.1ம் தேதி 16 பேருக்கும் டிச.2ம் தேதி 15 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கரோனா தொற்று பரவல் அதிகரித்து வரும் நிலையில் அதற்கு ஏற்ப தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் சிகிச்சை அளிப்பதற்கான வசதிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் உத்தரவிட்டுள்ளார்.

வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை அளிப்பதற்காக 50 படுக்கை களுடன் கூடிய ‘ஒமைக்ரான் தனி வார்டு’ ஏற்படுத்தியுள்ளனர். இங்கு தனிமைப்படுத்தும் வசதி, ஆக்சிஜன் வசதி, வென்டிலேட்டர் வசதிகளுடன் கூடியதாக ஏற்படுத்தியுள்ளனர். மேலும், தீவிர சிகிச்சைக்காக 4 படுக்கை களை தனியாக அமைத்துள்ளனர். ஒமைக்ரான் கண்டறியப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான குழுவினர் அங்கு பணிபுரிய அனைத்து நடவடிக்கை களையும் எடுத்துள்ளனர்.

வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஏற்கெனவே 500 படுக்கைகளுடன் கூடிய கரோனா சிகிச்சை வார்டு உள்ளது. இங்கு, அனைத்து

Owned and Published by M.ABDUL RAHMAN from No.61, Venkata Mesthiri Street, Mannadi, Chennai-600 001 and Printed S.ALI MOHAMED SAYEED by J.M.PROCESS, at 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-600 014. Editor: K.MADHUSUDHANAN

படுக்கைகளுக்கும் ஆக்சிஜன் வசதியும் ஏற்படுத்தியுள்ளனர். தேவை ஏற்பட்டால் அவற்றை சிறப்பு வார்டுகளாக மாற்றவும் தயாராக உள்ளனர்.

வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனை களில் ஆக்சிஜன் வசதிகளுடன் கூடிய கரோனா சிகிச்சை சிறப்பு வார்டுகள் உள்ளன. இங்கு தேவைக்கு ஏற்ப படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் மருத்துவத் துறையினர் தயாராகி வருகின்றனர்.

திருவண்ணாமலை

திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் உள்நோயாளிகள் பிரிவு கட்டிடத்தில் உள்ள 2வது தளத்தில், ஒமைக்ரான் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க 60 படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், ஆக்சிஜன் வசதிகளும் உள்ளன. சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் உதவியாளர்கள் பட்டியலும் தயார் நிலையில் உள்ளது.

இதுகுறித்து மருத்துவ அதிகாரி ஒருவர் கூறும்போது, "கரோனா 2வது அலை உச்சம் தொட்டபோது 675 படுக்கைகள் ஒதுக்கப்பட்டு, தொற்றால் பாதிக் கப்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பிரசவம் மற்றும் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு தவிர்த்து அனைத்துப் பிரிவுகளும், கரோனா வார்டுகளாக மாற்றம் செய்யப்பட்டன. தற்போது, கரோனா தொற்று படிப்படியாக குறைந்துள்ளது. இருப்பினும், கரோனா தொற்றுக்கு சிகிச்சை அளிக்க 100 படுக்கைகள் உள்ளன. அதே நேரத்தில் 2 பேர் மட்டுமே சிகிச்சை பெறுகின்றனர்.

இந்நிலையில் ஒமைக்ரான் தொற்றால் பாதிக்கப்பட்டவர் களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 60 படுக்கைகள் தயார் நிலையில் உள்ளன.

ஏற்கெனவே, கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர் களுக்கு சிகிச்சை அளிக்க நியமிக்கப்பட்ட 48 மருத்துவர் களும் தங்களது பணியை தொடர்ந்து செய்து வருகின்றனர். அவர்களது பணி, ஒமைக்ரான் வார்டிலும் தொடரும்" என்றார்.

# விரைவில் அதிமுக நிலை மாறும், தலை நிமிரும்

## தொண்டர்கள் கவலைப்பட வேண்டாம் என சசிகலா திட்டவட்டம்



**அதிமுக தொண்டர்கள் கவலைப்பட வேண்டாம். விரைவில் நிலை மாறும், தலை நிமிரும் என்று சசிகலா தெரிவித்துள்ளார்.**

அதிமுக என்றைக்குமே எளிய தொண்டர்களுக்கான இயக்கமாக செயல்பட்டு, நாட்டின் 3வது பெரியகட்சி என்ற நிலைக்கு சென்றது. ஆனால், இன்றைய நிலையை பார்க்கும்போது, இதற்காகவா நம்இருபெரும் தலைவர்களும் ரத்தத்தை வியர்வையாக்கி ஓயாதுஉழைத்து கட்சியை காப்பாற்றினர்? இதை நினைக்கும்போது, தொண்டனின் நெஞ்சம் குமுறுகிறது.

என்றைக்கு தனிமனித விருப்பு வெறுப்புகளுக்கு இயக்கம் பயன்பட்டதோ, அன்று முதல் அதன்மதிப்பு குறைந்தது. தொண்டர்களையும் மறந்தது.

தொண்டர்கள் சோர்ந்து போகாமல் தைரியமாக இருங்கள். ஒரு சிலருடைய தேவைகளுக்காகவும், விருப்பு, வெறுப்புகளுக்காகவும் செயல்பட்டுக் கொண்டு இருக்கும்நம் இயக்கத்தை, சரிசெய்து, மீண்டும் தொண்டர்களுக்கான இயக்கமாக விரைவில் மாற்றிக் காட்டுவோம். அனைத்து அடிமட்டத் தொண்டர்களும் சந்தோஷமாக, கவலையின்றி இருங்கள். கவலைப்படாமல் சிறிது காலம் பொறுத்திருங்கள். விரைவில் அதிமுக நிலை மாறும், தலை நிமிரும். எத்தனை இடர்ப்பாடுகள், சோதனைகள் ஏற்பட்டாலும் தகர்த்தெறிந்து என் உயிர்மூச்சு உள்ளவரை நம் இயக்கத்தை காத்து, தொண்டர்களின் இயக்கமாக மாற்றும் வரைஉழைத்துக் கொண்டே இருப்பேன். ஓய்ந்துவிட மாட்டேன்.



# விண்ணை தொட வித்தாகும் வயது எது?

**ஐந்து முதல் எட்டு வயதுக்குள் நீச்சல் சொல்லிக் கொடுங்கள். தன்னை காத்துக் கொண்டு, பிறரையும் காப்பாற்ற முடியும்.**

சைக்கிள் ஓட்ட கற்றுக் கொடுக்க காட்டும் ஆர்வத்தில், ஒரு பங்காவது நீச்சல் சொல்லி தரவும் காட்டுங்கள். ஏனெனில் இரண்டுமே, உடம்பை பேலன்ஸ் செய்தால் தான் வரும்.

பிரட் ஆம்லெட் போட சொல்லிக் கொடுங்கள். கையில் பிங்க் நிற 2000 ரூபாய் நோட்டுகளோ, பச்சை வர்ண டாலர்களோ கத்தையாக இருந்தாலும், சில இடங்களில் ரொட்டி தவிர எதுவும் கிடைக்காது. தான் சாப்பிட்ட தட்டை சுத்தம் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். அதுக்கு நீங்க, முதலில் உங்க தட்டை கழுவனும். சமைத்த பாத்திரங்களையும், கழுவ சொல்லிக் கொடுத்தால் போனஸ். பையன் எதிர்காலத்தில் நல்ல பொறுமைசாலியாக திகழ்வான்.

பையனின் மேட்ரிமோனி பக்கத்தில் உள்ள "இன்ன பிற தகுதிகள்" என்ற இடத்தில் "சமைக்க தெரியும், பாத்திரம் கழுவவும் தெரியும்" என்று நிரப்பி இருந்தால், இப்பவே பெண்ணை பெற்றவர்கள் நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு சம்பந்தம் பேச வருகிறார்களாம். இன்னும் பத்து வருடம் கழித்து சொல்லவே வேண்டாம். "ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது" என்று உங்கள் மகன் பாடுவார்.

வாசித்தல் என்ற போதை பழக்கத்தை ஏற்படுத்துங்கள். முடிந்தால் வீட்டில் ஒரு நூலகம் அமைக்க உதவுங்கள்.

அப்பா அம்மாவுக்கு மாதாமாதம் பணம் கொல்லைப்புற வேப்ப மரத்தில் காய்க்க வில்லை என்று தெரியப்படுத்துங்கள். 15 வயதில் அவர் தனியாக சேமிக்க வழி செய்யுங்கள்.

பேருந்து, மின்சார ரயில் என எதிலும் பைசா கோபுரம் போல சாயாமல் இரண்டு கால்களில், தஞ்சை பெரிய கோவில் போல நேராக நிற்க சொல்லிக் கொடுங்கள். உங்கள் மகன் மீது 50 KG தாஜ்மகாலே சாய்ந்தாலும், தைரியமாக சுட்டிக் காட்டவும் சொல்லிக் கொடுங்கள். கோபம் வந்தால், எதிராளியின் தாயை, தமக்கையின் மானத்தை குறிக்கும் வசைச் சொற்களை பயன்படுத்துவது தமிழுக்கு இழுக்கு என்று சொல்லிக் கொடுங்கள். அது வட்டார வழக்குமல்ல, அவரது இயலாமையே(Impotency).

"ஒருவன் பிறருக்கு கொடுப்பதை எல்லாம் தனக்கே கொடுத்துக் கொள்கிறான்". ரமண மகரிஷி

விதண்டாவாதம் புரிபவரை கடந்து போக, ஒரு சிறு புன்னகை போதும். பதிலுக்கு பதிலளித்துக் கொண்டிருந்தால், முட்டாள்களின் எண்ணிக்கை தான் கூடும். ஒருவர் வாயை திறந்தாலே, பார்வையாளருக்கு அவரது மேதமை அல்லது பேதைமை தெரிந்து விடும்.

NO means NO என்பதை விட NEVER என்று சொல்லி கொடுங்கள். பட்டாம்பூச்சியே தேடி வந்து நம் தோளில் அமர்ந்தாலும், அதை கையில் பிடிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஆண்களுக்கும் பாலியல் தொந்தரவுகள் ஏற்படும் என்று சொல்லிக் கொடுங்கள். Even, Men cannot take it for granted.